செ.வெ.எண்.58 நாள்: 28.04.2020

**தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் வட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் தூய்மை பணியாளர்கள், ஆட்டோ ஓட்டுனர்கள், முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள், விதவைகள் என மொத்தம் 650 நபர்களுக்கு அரிசி மற்றும் காய்கறிகள் அடங்கிய பைகளை வழங்கினார்.**

---

தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் வட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் திரு.மோகன் அவர்கள் ஏற்பாட்டில் தூய்மை பணியாளர்கள், ஆட்டோ ஓட்டுனர்கள், முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள், விதவைகள் என மொத்தம் 650 நபர்களுக்கு அரிசி மற்றும் காய்கறிகள் அடங்கிய பைகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (28.04.2020) நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் புளியம்பட்டியில் 200 நபர்களுக்கும், ஒட்டநத்தத்தில் 200 நபர்களுக்கும், ஓட்டப்பிடாரம் பகுதியில் 250 நபர்கள் என மொத்தம் 650 தூய்மை பணியாளர்கள், ஆட்டோ ஓட்டுனர்கள், முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள், விதவைகள் ஆகியோர்களுக்கு அரிசி மற்றும் காய்கறிகள் அடங்கிய பைகளை வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப.. அவர்கள் முன்னிலை வகித்தார்.

பின்னர் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கடம்பூர் செ.ராஜூ அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது:

கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவாமல் தடுக்க இந்தியா முழவதும் மே 3ம் தேதி வரை சுய ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலி காட்சி மூலம் மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து பல்வேறு அறிவுரைகளை வழங்கி வருகிறார்.

மேலும் சுய ஊரடங்கு காலத்தில் பொதுமக்களின் வாழ்வாராதம் பாதிக்ககூடாது என்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரணை தொகை தலா ரூ.1000/- மற்றும் ஏப்ரல் மாத ரேசன் பொருட்கள் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்திலும் வழங்கப்பட்டது. மே மாத ரேசன் பொருட்களும் விலையில்லாமல் பொதுமக்களுக்கு வழங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு தொழிலாளர்கள், நலவாரிய உறப்பினர்கள் என 83 லட்சம் நபர்களுக்கு தலா ரூ.1000/- வீதம் ரூ.83 கோடி நிவாரணம் வழங்கப்படும் என அறிவித்துள்ளார்கள். மேலும் ஓய்வின்றி உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கு ரூ.3000/- கொரோனா நிவாரண தொகை வழங்கப்பட உள்ளது. 1778 தீப்பெட்டி தொழிற்சாலைகளில் பணியாற்றும் 21770 தொழிலாளர்களுக்கு கொரோனா நிவாரண தொகை ரூ.1000 வீதம் ரூ.2.18 கோடி வழங்கப்படுகிறது. அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற கழகம் சார்பில் தூத்துக்குடி மாநகராட்சி, கோவில்பட்டி மற்றும் காயல்பட்டணம் நகராட்சி, 9 பேருராட்சி மற்றும் 12 ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் 5000க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்களுக்கு அரிசி, பருப்பு உள்ளிட்ட மளிகை பொருட்கள், காய்கறிகள் வழங்கப்பட்டது. மேலும் 3ம் தேி வரை அனைத்து அம்மா உணவகங்களிலும் 3 வேளை இலவசமாக உணவு அளிப்பதற்கான செலவுகள் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற கழகம் சார்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நமது மாவட்டத்தில் நேற்றுவரை 3229 நபர்களின் மாதிரிகள் பரிசோதனைகள் செய்ததில் 27 நபர்களுக்கு கொரோனா தொற்று நோய் உறுதி செய்யப்பட்டது. இதில் கொரோனா தொற்று பாதிக்கப்பட்ட 25 நபர்கள் சிகிச்சை பெற்று நலமுடன் வீடு திரும்பி உள்ளார்கள். தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ஒருவர் சிகிச்சை பலன் இன்றி உயிர் இழந்துள்ளார். தற்போது தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ஒருவர் மட்டுமே சிகிச்சை பெற்று வருகிறார்.

தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி மாவட்ட நிர்வாகம் கொரோனா தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டதன் காரணமாக கொரோனா தொற்று நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் திரு.மோகன், கோவில்பட்டி கோட்டாட்சியர் திருமதி.விஜயா, ஓட்டப்பிடாரம் வட்டாட்சியர்கள் திரு.ரகு, திருமதி.எலிசபெத் (சமூக பாதுகாப்பு திட்டம்), மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் ஓட்டப்பிடாரம் திரு.ரவிசந்திரன், வட்டார வளர்சி அலுவலர்கள் திருமதி.வளர்மதி, திருமதி.கெலன்பொன்மணி, மாவட்ட கவுன்சிலர் திரு.தேவராஜ், ஒன்றிய கவுன்சிலர்கள் திருமதி.மூக்கம்மாள், திரு.கோபி, திரு.ஆலோசனைமரியான், ஊராட்சி தலைவர்கள் திருமதி.சரிதா (ஓட்டநத்தம்), திரு.அய்யாத்துறை (புளியம்பட்டி), திரு.ஜஸ்டின், திரு.கண்ணன், திரு.சுடலைமணி, திரு.ரவி, திரு.கருப்புசாமி, திரு.மாடசாமி, முக்கிய பிரமுகர்கள் திரு.தர்மராஜ், திரு.முத்துசாமி, திரு.மணி, திரு.ஆரோக்கியம், திரு.முருகராஜ், திரு.குமரேசன், திரு.எம்.எஸ்.கண்ணன், திரு.முத்துசாமி, திரு.ஆதிலிங்கம், திரு.பரமசிவன், திரு.கிருபாகரன், திரு.அழகுராஜா, திரு.பெருமாள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி